**உதவி அமர்வு நீதிமன்றம், உசிலம்பட்டி**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,
உதவி அமர்வு மற்றும் சார்பு நீதிபதி, உசிலம்பட்டி
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் நாள் திங்கட்கிழமை

**அமர்வு வழக்கு எண்.299/2020**

(மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, உசிலம்பட்டியின் முதல் நிலை பதிவேட்டு எண்.03/2020)

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக, உசிலம்பட்டி டவுன், காவல் ஆய்வாளர் அவர்கள், உசிலம்பட்டி டவுன் காவல் நிலைய குற்ற எண்.215/2019–ன் மூலம். |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | 1) ஆறுமுகம் (32/2019),<br>த/பெ. சிற்றம்பலம்,<br>கருகப்பிள்ளை,<br>கஸ்பாமுதலைக்குளம் போஸ்ட்,<br>உசிலம்பட்டி தாலுாகா,<br>மதுரை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307–ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. | இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது. | இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307–ன் கீழ் |
| தீர்வு. | எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307–ன் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்வு. |

இவ்வழக்கு என் முன்பாக, கடந்த 18.03.2026–ம் தேதி, இறுதி விசாரணைக்கு வந்தபொழுது, குற்றமுறையீட்டாளருக்காக, கற்றறிந்த அரசு வழக்குரைஞர் திரு.R.இராஜசேகர் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக, கற்றறிந்த வழக்குரைஞர் திரு.V.கணேசன் அவர்கள்

ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்:–

**தீ ர் ப் பு ரை:–**

**1)** இவ்வழக்கின் புகார்தாரும் 1–வது சாட்சிமான ராகவன் என்பவர் மதுரை மாநகர் கூடல்புதூரில் திருமணம் ஆகாத நிலையில் அவரது அம்மாவுடன் வசித்து வந்துள்ள நிலையில், உசிலம்பட்டி பூ மார்க்கெட்டில் கடந்த 2 வருடங்களாக லோடுமேனாக வேலை பார்த்து வந்துள்ளார். 1–வது சாட்சி வேலை பார்க்கும் பூ மார்க்கெட்டில் எதிரியான ஆறுமுகம் என்பவரும் லோடுமேனாக வேலை பார்த்து வந்துள்ளார். சம்பவ நாளான 20.04.2019–ம் தேதிக்கு முன் எட்டு மாதத்திற்கு முன்பாக 1–வது சாட்சியான ராகவன் எதிரி ஆறுமுகத்தின் இருசக்கர வாகனத்தை அவருக்கு தெரியாமல் எடுத்து சென்று மீன் வியாபாரி ராஜா என்பவரிடம் கொடுத்து வைத்துள்ளார். இதை எதிரி ஆறுமுகம் தெரிந்து இருசக்கர வாகனத்தை கேட்ட போது 1–வது சாட்சியானவர் ரூ.3,000/–ஐ பெற்றுக்கொண்டு இருசக்கர வாகனத்தை எதிரி ஆறுமுகத்திடம் ஒப்படைத்துள்ளார். இதனால், எதிரி ஆறுமுகத்திற்கு 1–வது சாட்சிக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. அதன்விளைவாக, எதிரி ஆறுமுகம் 1–வது சாட்சியை பார்க்கும் போதெல்லாம் நீ பூ மார்கெட்டிற்கு வர கூடாது என்று சத்தம் போட்டு வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 20.04.2019–ம் தேதி 1–வது சாட்சியானவர் மாலை 16.15 மணியளவில் உசிலம்பட்டி பூ மார்க்கெட்டில் 2 மற்றும் 3 சாட்சிகளுடன்

பேசிக்கொண்டிருந்த பொழுது, அங்கு வந்த எதிரி, 1–வது சாட்சியைப் பார்த்து உன்னை மார்க்கெட்டிற்குள் வரக்கூடாது என்று பலமுறை சொல்லியும் ஏன்டா தேவிடியா மகனே வருகிறாய் என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசியும், நீ உயிரோடு இருந்தால் தானே லோடு மேன் வேலை பார்ப்பாய் இத்தோடு செத்து தொலைந்து போடா தாயோலி என்று சொல்லி எதிரி இடுப்பில் வைத்திருந்த DAY NIGHT என்று குறிப்பிட்ட குவாட்டர் பாட்டிலை உடைத்து 1–வது சாட்சியின் இடது பக்க வயிற்றில் குத்தி 1–வது சாட்சிக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே, எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307–ன் கீழ், தண்டிக்கப்பட வேண்டிய ஒன்று, என்று, குற்றமுறையீட்டாளரால், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, உசிலம்பட்டியில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

2) பின், ஷை குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பி.ஆர்.சி. எண்.3/2020–என, எண் கொடுக்கப்பட்டு, எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு. 207–ன் கீழ், நகல்கள் வழங்கப்பட்டு, பின் இவ்வழக்கு, மேல் விசாரணைக்காக மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றம், மதுரைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, எஸ்.சி.எண்.299/2020–என, எண் கொடுக்கப்பட்டு, பின் அங்கிருந்து, இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, எதிரி முன்னிலையானதும், அவருக்கு வழக்கு நகல்கள், இலவசமாக வழங்கப் பட்டிருக்கிறது என்பதை ஊர்ஜிதம் செய்து, இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307–ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு, போதிய முகநுட்ப ஆதாரங்கள் இருந்ததால், எதிரி மீது,

மேற்படி பிரிவுகளின் கீழ், குற்றச்சாட்டுக்கள், வனைந்து, எதிரியிடம், குற்றம் பற்றி விளக்கிக்கூறி, வினவிய பொழுது, எதிரி குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

**3)** அதனால், அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதன் பேரில், அரசு தரப்பில், மூன்று சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, எட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஒன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4) அரசு தரப்பு வழக்கும் மற்றும் சாட்சிய சுருக்கமும் பின்வருமாறு:-**

(i) அ.சா.1 செந்தில் அவருடைய சாட்சியத்தில், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், ராகவனும், எதிரியும் சண்டை போட்டதாக கேள்விப்பட்டதாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தவமணி அவருடைய சாட்சியத்தில், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் 1.00 மணிக்கு மேல் போலீசார் தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், எதற்காக தான் கையெழுத்து போட்டேன் என தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.3- காவல் ஆயவாளர் சுரேந்திரகுமார், அவருடைய சாட்சியத்தில், கடந்த 20.04.2019-ம் தேதி 14.15 மணிக்கு கூடல்புதுார் ஆண்டி மகன் ராகவன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று, அப்போது நிலைய பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் திரு. மோகன்ராஜ் என்பவர் அரசு மருத்துவமனை, மதுரையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு

சிகிச்சையிலிருந்த ராகவன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று, பின்னர் நிலையம் வந்து நிலைய கு.எண்.215/2019, சட்டப்பிரிவுகள் 294(பி), 307 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், வழக்கு கோப்பினை விசாரணைக்காக அப்போது காவல் ஆய்வாளராக இருந்த திரு.மாடசாமி அவரது பார்வைக்கு வைத்ததாகவும், அவர் அவர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதல் விசாரணை செய்ததாகவும், காவல் ஆய்வாளர் இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் அவரது சார்பாக ஆவணங்களை பார்வையிட்டு தான் சாட்சியம் அளிப்பதாகவும், காவல் ஆய்வாளர் மாடசாமி அவர்கள் அன்றே சம்பவம் இடம் சென்று காலை 7.15 மணிக்கு சாட்சிகள் திரு. கணேசன், முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், சம்பவ இடத்தில் வழக்கு சம்பந்தப்பட்ட 180 ML அளவு கொண்ட உடைந்த காலி பாட்டிலை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், இவ்வழக்கின் சாட்சிகளான திரு.ராகவன், அன்பழகன், செந்தில், தவமணி, ராஜ்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், சாட்சிகள் விசாரணையிலிருந்தும், அவர்களது ரகசிய விசாரணையிலிருந்தும் சம்பவ உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான ஆறுமுகம் என்பவரை அன்றைய தினமே 10.30 மணிக்கு உசிலம்பட்டி, முருகன் கோவில் முன்பு கைது செய்தும், பின்னர் எதிரி எவ்வித துன்புறுத்தலின்றி தாமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்ததால் இவ்வழக்கின் சாட்சிகளான தவமணி மற்றும் ராஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில்

ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் படி சம்பவம் இடத்திற்கு எதிரியை அழைத்து சென்று, பார்வையிட்டு பின்னர், காவல் நிலையம் கொண்டு சென்று எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் 180 ml அளவுள்ள உடைந்த பாட்டில் சா.பொ.1 ஆகவும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட வாதியானவருக்கு மேல்சிகிச்சையளித்து கருத்துரை வழங்கிய மதுரை, ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் மலர்கண்ணன் என்வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் முதலுதவி சிகிச்சையளித்த மருத்துவர் பாலமுருகன் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றதாகவும், பின்னர் காவல் ஆய்வாளர் மாடசாமி பணிமாறுதலில் சென்றதால் அவருக்கு பிறகு பணியில் சேர்ந்த காவல் ஆய்வாளர் சார்லஸ் அவர்கள் இவ்வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, மேற்படி சாட்சிகளை விசாரணை செய்தபோது, ஏற்கனைவே காவல் ஆய்வாளர் மாடசாமியிடம் கூறியது போன்று கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யாததாகவும், பின்னர் இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட 180 ml காலி மதுபாட்டிலை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும், அதன்பின்னர் வழக்கு விசாரணை முடித்து 17.10.2019–ம் தேதி பிரிவுகள் 294(பி), 307–இதச வின் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்யததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5)** அரசு தரப்பு சாட்சியங்களில் காணப்பட்ட, எதிரிக்கு பாதகமாக உள்ள, அம்சங்கள் குறித்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)–ன் கீழ், எதிரியிடம் எடுத்துக்கூறி, வினவியபொழுது, அவர், பொய்சாட்சி என்றும் இவ்வழக்கு குறித்து ஏதேனும் கூறிக்கொள்ள விரும்புகிறீர்களா? என்று வினவிய பொழுது, பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க, சாட்சிகள் ஏதும் இருக்கிறதா? என்று வினவியபொழுது, இல்லை என்றும் தெரிவித்தார்.

**<u>6) தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:–</u>**

அரசு தரப்பால், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? என்பதே ஆகும்.

**<u>7) பிரச்சனைக்குரிய தீர்வு:–</u>**

(i) அரசு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. முதலாவதாக, அரசு தரப்பு வழக்கானது, எதிரிக்கும், 1–வது சாட்சிக்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ள நிலையில், கடந்த 20.04.2019–ம் தேதி 1–வது சாட்சியானவர் மாலை 16.15 மணியளவில் உசிலம்பட்டி பூ மார்க்கெட்டில் 2 மற்றும் 3 சாட்சிகளுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது, அங்கு வந்த எதிரி, 1–வது சாட்சியைப் பார்த்து உன்னை மார்க்கெட்டிற்குள் வரக்கூடாது என்று பலமுறை சொல்லியும் ஏன்டா தேவிடியா மகனே வருகிறாய் என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசியும், நீ உயிரோடு இருந்தால் தானே லோடு மேன் வேலை பார்ப்பாய் இத்தோடு செத்து தொலைந்து போடா தாயோலி என்று சொல்லி எதிரி இடுப்பில் வைத்திருந்த DAY NIGHT என்று குறிப்பிட்ட குவாட்டர் பாட்டிலை உடைத்து 1–வது சாட்சியின் இடது பக்க வயிற்றில் குத்தி 1–வது சாட்சிக்கு கொடுங்காயத்தை

ஏற்படுத்தி எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307,–ன் கீழ், தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளார் என்பதாகும்.

(ii) அடுத்ததாக, இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி 1, ராகவன் கடந்த 5, 6 வருடங்களாக ஊரில் இல்லை எனவும், தற்போது, எங்கு இருக்கிறார் என தெரியவில்லை எனவும் கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியதால் அரசு தரப்பு சாட்சி 1 ராகவன் நீக்கரவு செய்தும், அடுத்ததாக, சம்பவத்தை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சி அன்பழகன் சாட்சி 2 இறந்துவிட்டதால் அவருடைய சாட்சியும் நீக்கறவு செய்தும், அடுத்த சாட்சியான சாட்சி 3, செந்தில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என பிறழ்சாட்சியம் ஆகிவிட்டார். அ.சா.2 எதிரியை கைது செய்த போது ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். ஆனால், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும் அரசு தரப்பில் பிறழ்சாட்சியமாகியிருக்கிறார். அரசு தரப்பு வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள், ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகசரில் கையொப்பம் செய்த சாட்சிகள் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கருத்திற்கொண்டு எதிரியை தண்டிப்பது முறையாகாது. எனவே, அரசு தரப்பில் எதிரி மீது, சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுக்கள், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று, இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே, இந்த பிரச்சனைக்கு, அரசு

தரப்பிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307–ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுக்களிலிருந்து, எதிரியை, கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில், ஆர்.பி.ஆர்.எண். 40/2023–ல் கண்ட, அ.சா.பொ.1 Day Night என்று குறிப்பிடப்பட்டுள்ள உடைந்த பாட்டில் ஒன்று மேல்முறையீடு காலத்திற்குப்பின் அழிக்க வேண்டியது என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப் பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் நாள், என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.23 18:15:50 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.

**1) அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| 1) அ.சா.1 | திரு. செந்தில் |
| 2) அ.சா.2 | திருமதி. தவமணி |
| 3) அ.சா.3 | திரு. காவல் ஆய்வாளர். சுரேந்திரகுமார். |

**2) அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.2 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.6 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.7 | படிவம் 91 |
| அ.சா.ஆ.8 | காயச்சான்றிதழ் |

**3) அரசு தரப்பு சான்றுபொருள் :–**

1. 180 ml அளவு கொண்ட Day Night என்று குறிப்பிடப்பட்டுள்ள உடைந்த பாட்டில்

**4) எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:–**

– இல்லை –

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.23 18:15:58 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.

**இணைப்பு:–**

1) இவ்வழக்கு விசாரணையின் பொழுது, எதிரி நீதிமன்ற காவலில் இருந்தார்.

2) சாட்சிகள் எவரும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3) தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**Judicial Form No.61.**

[See Rule 106]

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, USILAMPATTI

JUDGMENT IN SESSIONS CASE No. 36 Of 2012

ON THE FILE OF THE HONOURABLE PRINCIPAL SESSIONS COURT, MADURAI

Complainant: The Inspector of Police, Uilampatti Town Police Station.

Accused : 1) Arumugam (32/2019),
S/o.Sitrampalam,
Karukapillai,
Kaspa Muthaikulam,
Usilampatti Taluk,
Madurai District.

Offence : First accused has been charged for the offence punishable U/s.294(b), 307 of I.P.C.

Finding : Acquitted

Sentence : Acquitted

| Serial Number | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name. | Husband's name. | Caste or race. | Occupation. | Residence. | Age. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1) | Arumugam | S/o. Sitrampalam, | Hindu | --- | Karukapillai, | 32/2019 |

| Date of | | | | | | | Explanation of delay. |
|---|---|---|---|---|---|---|---|
| Occur–rence. | Com–plaint. | Apprehension or appearance. | Release on bail. | Commen–cement of trail | Close of trial. | Sentence or order. | |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 20.04.19 | 21.04.19 | Accused is remanded on 22.01.2026 | Accused is currently in judicial custody | 27.01.21 | 26.02.26 | Acquitted | No delay |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.23 18:16:08 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.

உதவி அமர்வு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

அமர்வு வழக்கு எண்.299/2020

23.03.2026

தீர்ப்புரை